Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 05, 2024

திங்கட்கிழமை ஆகஸ்ட் 05, 2024 | ஒளி: 10 கதிர் 021 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## விகாரதிபதிக்கு இன்று இறுதி கிரியை



கொழும்பு-02 கங்காராமய விகாரதிபதி கல்பொட ஞானிஸ்ஸர தேரரின் இறுதி கிரியை, விஹாரையின் திடலில், இன்று (05) திங்கட்கிழமை, மாலை 4 மணியளவில் இடம்பெறும். அவரது பூதவுடலுக்கு பெருந்திரளான மக்கள் ஞாயிற்றுக்கிழமை (04) அஞ்சலி செலுத்தினர். விகாரதிபதி, கடந்த வெள்ளிக்கிழமை (02) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 81ஆகும்.

# அம்பாறை துப்பாக்கி சூட்டில் நால்வர் பலி





*பாறுக் ஷிஹான்*

அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நாமல் ஓயா பகுதியில் உள்ள கராண்டுகல உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரினால் துப்பாக்கிச் சூடு ஞாயிற்றுக்கிழமை (04) அதிகாலை 2.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இக்கினியாகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி, மாமி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட 33 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தன் உயிரை மாய்த்து கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



### ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள்

# “மொட்டை பிளக்கவில்லை”

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பவர்களால் பிளவுபடவில்லை என்றும், கட்சியைப் பற்றி கவலைப்படாத தமது தனிப்பட்ட நலன்களுக்காக நிற்கும் ஒரு சிறு குழுவினரால் பிளவுபட்டது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களைப் பற்றி கவலைப்படாத இந்த சிலர் பணத்திற்காக கட்சிக்கு துரோகம் செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடன் சனிக்கிழமை (03) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி – கட்சியை உடைத்து விட்டீர்கள் என்ற குற்றச்சாட்டு உள்ளது. கட்சி உடைந்தது ஏன்?

பதில் – கட்சியை ஒன்றிணைத்து இந்தப் பயணத்தை மேற்கொள்ள முயற்சிப்பவன் நான். அப்படி உடைப்பவர்கள் 2022 இல் ரணிலை நியமிக்காமல் டலஸை நியமித்திருக்க வேண்டும்.ஏன் அதைச் செய்யாமல் நாட்டைப் பற்றி சிந்தித்து கட்சியை ஒருங்கிணைக்கும் வேலைத்திட்டத்தை முன்மொழியப்பட்டது.

தொடர்ச்சி P2

# “இறந்தகாலத்திடம் இருள்: வளமான விடியல் வரும்”



இருளை இறந்தகாலத்திடம் ஒப்படைத்துவிட்டு எமது நாட்டுக்கு வளமான விடியலை உருவாக்கிட முடியும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் (வலதுகுறைந்த ஆட்கள்) பற்றிய தேசிய மக்கள் சக்தியின் தேசிய கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் வெளியிடுதல் – கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி சனிக்கிழமை (03) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்கள் தெரிகின்ற , காதுகள் கேட்கின்ற, சரியான அசைவுகளைக் கொண்டுள்ளவர்கள்தான் நீண்டகாலமாக எங்கள் நாட்டை ஆட்சிசெய்தார்கள். அதன் பாதகவிளைவுகள் ஒட்டுமொத்த சமூகத்தையும் ஆரத்தழுவி உள்ளன. உங்களைப் பார்க்கும்போது, உங்களின் பேச்சுகளை செவிமடுக்கும்போது, உங்கள் திறமைகள் வெளிப்படுத்தப்படுகையில் நாங்கள் ஏன் இவ்வளவு தாமதித்திருக்கிறோம் என்ற உணர்வு எமக்கு ஏற்படுகின்றது. இந்த இருளை இறந்தகாலத்திடம் ஒப்படைத்துவிட்டு எமது நாட்டுக்கு வளமான விடியலை உருவாக்கிட முடியுமென்ற நம்பிக்கை எம்மிடம் நிலவுகின்றது என்றார்..

இன்று எம்மனைவரதும் கண்கள் அகலத்திறந்துவிட்டன என நினைக்கிறோம். எம்மனைவருக்காகவும் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமொன்றை அமைத்துக்கொள்வோமென அழைப்பு விடுக்கிறோம். நாம் எதிர்நோக்குகின்ற சிக்கல்களை கடவுளின் விருப்பம் அல்லது பூர்வஜென்மபலன் என நினைத்து மனதை தேற்றிக்கொண்டோம் என்றார்.

உலகம் முன்நோக்கி நகர்ந்து கைத்தொழில் புரட்சி இடம்பெறுகையில் அந்த கைத்தொழில் புரட்சியால் உறிஞ்சிக்கொள்ள முடியாமல் போன பிரிவினரை வலதுகுறைந்த ஆட்கள் என அழைத்தோம். அவர்களை தனிமைப்படுத்தினோம். எனினும் சமூகத்தின் மற்றுமொரு படிமுறையில் அவர்களை கவனித்துக்கொள்வது இரக்கசிந்தை அல்லது புண்ணிய கருமம் எனவும் பிறர்மீது பரிவிரக்கம் காட்டுதல் போன்ற உணர்விற்கு கட்டுப்படுத்தி நலனோம்பலை வழங்கினோம். எனினும் ஐக்கிய நாடுகள் அங்கீகரித்தக்கொண்ட பிரேரணைக்கிணங்க இந்த மக்களின் உரிமைகள் என்றவகையிலான அடிப்படை விடயங்கள் அறிமுகஞ்செய்யப்பட்டு நீண்ட முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சி P2

# மர்மமான முறையில் யாழில் சிசு மரணம்

### அடம்பிடித்ததால் திருகியதாக அம்மா தெரிவிப்பு

*எம்.றொசாந்த், நிதர்ஷன் வினோத்*

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை மாத சிசு, கைகள், கால்கள் முறிக்கப்பட்டு , சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, தலையில் பலமாக தாக்கப்பட்டதில் உயிரிழந்துள்ளது.

தொடர்ச்சி P2





## ஜனாதிபதி இறுதி அஞ்சலி

கொழும்பு–02 கங்காராமய விகாரதிபதி கல்பொட ஞானிஸ்ஸர தேரரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதல் பெண்மணி மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர், ஞாயிற்றுக்கிழமை (04) இரவு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# ரோஹிதவும் மாறினார்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

# தலவாக்கலை மாணவர்கள் நால்வரும் காலியில் மீட்பு



*பி.கேதீஸ்,கௌசல்யா,சுஜிதா,செ.தி பெருமாள்*

தலவாக்கலை கிரேட்வெஸ்டன் லூசா தோட்டத்தில் இருந்து ஜூலை 14 ஆம் திகதி முதல் காணாமல் போன பாடசாலை மாணவிகள் மூவரும் மாணவனும் 22 நாட்களுக்கு பின்னர், காலி பிரதேசத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகளான முரளிகிருஷ்ணன் லக்சிக்கா (வயது 16), ராஜகுரு மிதுஷா (வயது 16), சுந்தர்ரா ஜ் தர்ஷினி (வயது 16), சிறுவன் ராஜகுரு கோபி சாகர் (வயது 15) ஆகியோரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

மூவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் சமந்த பெரேரா,

தொடர்ச்சி P2

# கண்டி அமைப்பாளர் துரை மதியுகராஜா



ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தவிசாளர் துரை மதியுகராஜா,ஐக்கிய மக்கள் சக்தி கண்டி மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# “ரணிலை தோற்கடிக்க நால்வர் சூழ்ச்சி”



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க சஜித் பிரேமதாஸ, பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தம்மிக்க பெரேரா ஆகியோர் இரகசிய சதித்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக முன்னாள் அமைச்சர் திரு.பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு பல நாட்களாக கூடி இந்த கலந்துரையாடலை நடத்தியதாகவும் அவர் கூறுகிறார். சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்கி,

தொடர்ச்சி P2

# மு.கா உயர்பீடத்தில் இருந்து பிரதிப் பொருளாளர் வெளியேற்றம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட கூட்டம் ஞாயிற்றுக்கழமை(04) கட்சியின் தலைமையமான தாருஸ்ஸலாத்தில் நடைபெற்றது.

லுஹர் தொழுகைக்கான அதான் ஒலித்த வேளையில், கூட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில், பிரதிப் பொருளாலர் ஏ.சி.யஹியாகான் எடுத்திருந்த படங்களை முகநூலில் பதிவேற்றம் செய்ததமை , விஷமிகளுக்கு கட்சியை அநாகரிகமாக முகநூலில் விமர்சிக்க இடமளித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளினால் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ,அவரை கூட்டத்திலிருந்து வெளியேற்றுவதாக அறிவித்தார் .

கட்சியின் தலைவர் ஹக்கீம் உடனடி நடவடிக்கையாக யஹியாகானை நடைப்பெற்று கொண்டிருந்த

தொடர்ச்சி P2

# “தமிழகத்தில் ஏற்படும் மாற்றத்தால் இலங்கையர்களுக்கு வாய்ப்பு”



யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாண மக்கள் நீண்டகாலமாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற போதிலும், அந்த மாகாணத்தில் பாரிய பொருளாதார திறன் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த சந்தர்ப்பங்களைப் வடக்கு மாகாணம் உட்பட முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஒருபாதியாக இருக்கும் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அம்பாறை துப்பாக்கி சூட்டில் நால்வர் பலி

மொனராகலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் உள்ளடங்கும் கராண்டுகல உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு தன்னை தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் குடும்ப பிரச்சினை காரணமாக இடம்பெற்றுள்ளதா அல்லது வேறு காரணங்களால் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## “இறந்தகாலத்திடம் இருள்: வளமான விடியல் வரும்”



ஒருசில அரசுகள் இந்த சமுதாயத்திற்கு சமத்துவமான உரிமைகளை வழங்கியுள்ளன.

பொலிஸில்சென்று ஒருவரிடம் கேள்விகேட்கும்போது “ஊமைபோல் இருக்காமல் பேசு” எனக் கூறுவார்கள். அந்த இடத்தில் இருப்பது பேசாதித்தல் பற்றிய பிரச்சினையல்ல. அவமதிப்பிற்கு உள்ளாக்குதலும் அச்சுறுத்தலுமாகும். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் “செவிடன்போல் இருக்கவேண்டாம்” என்பார்கள்.

மற்றவரை நோகடித்திட, பிறரை அவமதிக்க மற்றவர்களின் உறுப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாமனைவரும் தவப்புதல்வர்களல்ல. ஒருசில பண்புகளால் ஒருசில பரிபூரணமின்மை நிலவுகின்றது. நீங்களும் மற்றவர்களைப்போல் சமத்துவமான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான கொள்கைகளை வகுப்பதும் அமுலாக்குவதுமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியமான குறிக்கோளாகும் என்றார்.

## ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள்
## “மொட்டை பிளக்கவில்லை”

கேள்வி – நீங்கள் தொகுதி அமைப்பாளர் பதவியை இழக்கப் போகிறீர்களே. அது உங்களுக்கு கவலையாக இல்லையா? நீங்கள் ரிஸ்க் எடுக்கிறீர்களே. ரணில் விக்கிரமசிங்க தோற்றால்?

பதில் – நான் அந்த ரிஸ்கை இன்று நேற்று எடுக்கவில்லை. அன்றைய தினம் மஹிந்த காற்றில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக அந்த முடிவை எடுத்தேன். இன்றும் அந்த முடிவை எடுக்கிறேன். ஏனென்றால் நாட்டுக்காக எடுக்கும் முடிவு கெட்டுப் போகாது.

கேள்வி – மாவட்ட தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறதே. உண்மையில் உதயங்க வீரதுங்க என்று சொல்லப்படுபவர் யார்?

பதில் – இப்படித்தான், ஊடகங்கள் மனிதனைத் தூக்கிப் பிடிக்கும் போது மனிதன் நாயகனாகின்றான். நாமல் ராஜபக்சவும் கூறுகிறார் அவர் பொய் சொல்கிறார் என்று. அமைச்சர் சமல் கூறுகிறார் அவர் பைத்தியம் என்று. அதனால் நான் ஏன் அதைப் பற்றி பேச வேண்டும்? குடும்பமே அதைச் சொல்கிறது. அதற்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. மாவட்ட தலைமை பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்கிறார்கள். எப்பொழுதாவது எனக்கு மாவட்டத் தலைமையோ, தொகுதி அமைப்பாளரோ வழங்கப்படவில்லை. எனக்கு ஏற்பாட்டாளர் பதவியே வழங்கப்பட்டது. பதவியை விட்டு விலகுவது எனக்கு பெரிய விஷயமில்லை.

கேள்வி – கடைசி நிமிடத்தில் மொட்டு வேட்பாளரை எப்படி போட்டீர்கள்?

பதில் – அதைப் போட்டவர்களிடம்தான் கேட்க வேண்டும். வேறு ஒப்பந்தங்கள் நடக்கின்றன. அவர் முன்வருகிறார் என்று சிலர் நினைக்கிறார்கள். ஜனாதிபதி தோற்கப் போகிறார் என்று தெரிந்தும் மொட்டிலிருந்து ஒருவரை அனுப்புகிறது. அடுத்து சஜித் அணி நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கும். போய் ஒரு அமைச்சுப் பெற்றுக்கொள்வார்கள். ஏனென்றால் ரணில் தோற்பார் என்று அவர் நினைக்கிறார். நாட்டைப் பற்றி சிந்திக்காமல், தனிமனித அரசியலில் அனைவரும் செயல்படுகின்றனர். அங்குதான் இந்த நாடு தவறு செய்கிறது.

கேள்வி – இந்த தலைமுறை அரசியலை முடிவுக்கு கொண்டு வந்து இந்த நாட்டை உங்களின் கையில் எடுக்க முடியாதா?

பதில் – மகிந்த ராஜபக்ச எப்போதும் எனது ஆதர்ச தலைவர். ஆனால் இன்று நிலைமை வேறு. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கு அரசியல் தளம் உள்ளது. பாரம்பரிய அரசியலை மாற்றியுள்ளோம். UNP, SLFP, முஸ்லிம் தலைவர்கள் இந்த மேடையில் இணைகின்றனர். இந்த நாட்டில் 1977 இல் தேர்தல் நடந்த போது, குறிப்பாக 94க்கு பிறகு, கூட்டணியில் இருந்த அரசியல் தலைவர்கள் இந்த நாட்டில் ஆட்சியைப் பிடித்தனர். எனவே இன்று அந்த அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவிடம் சேர்க்கப்பட்டுள்ளது. அது நல்ல அறிகுறி. நாட்டைப் பற்றி நினைத்து பாரபட்சமின்றி வேலை செய்யும் இடம் ஏற்பட்டுள்ளது.

## கண்டி அமைப்பாளர் துரை மதியுகராஜா

ஐக்கிய மக்கள் சக்தியின் விவசாய மாநாடு நுவரெலியா - ஹங்குராங்கெத்தயில் ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது. அதன்போதே, இந்த நியமனம் வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட துரை மதியுகராஜா, மத்திய மாகாண சபையின் உப தவிசாளராக இரண்டு தடவைகளும், அவைத் தலைவராகவும் பதவி வகித்தவர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தவிசாளரான இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான அமைப்பாளராக 25 வருடங்களுக்கு மேலாக , கண்டி மாவட்டத்தில் பணியாற்றியுள்ளார்.

## “ரணிலை தோற்கடிக்க நால்வர் சூழ்ச்சி”

பொதுஜன பெரமுனவுக்கு எதிர்க்கட்சி பலத்தை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம் என அவர் கூறுகிறார்.

சோதித்து பார்க்கும் நேரம் இல்லையென்றும், தப்பி தவறியேனும் அதிகாரம் மாறிவிட்டால், பெட்ரோல், உரத்தின் விலைகள் 5 ஆயிரம் ரூபாயாக உயரும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மர்மமான முறையில் யாழில் சிசு மரணம்

அளவெட்டி பகுதியை சேர்ந்த சசிரூபன் நிகாஸ் என்ற ஒன்றரை மாத, ஆண் சிசுவே உயிரிழந்துள்ளது.

சிசுவுக்கு தாய்ப்பால் கொடுத்த பின்னர் அந்த சிசு அசைவற்று கிடந்ததாகவும் பின்னர், சிசுவை அளவெட்டி வைத்தியசாலைக்கு சனிக்கிழமை (03) தாய் கொண்டு சென்றுள்ளார். அங்கிருந்து தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மாற்றிய போது சிசு உயிரிழந்துள்ளது.

சிசுவின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால் , உட்கூற்று பரிசோதனை ஞாயிற்றுக்கிழமை (04) முன்னெடுக்கப்பட்டது. சிசுவின் கைகள், கால்கள் முறிந்து இருந்தமை , தலையில் அடிகாயங்கள் காணப்பட்டமை , காதிலும் மெல்லிய கம்பியினால் துளையிட்ட அடையாளங்கள் உள்ளிட்டவற்றுடன் , உடலில் கண்டல் காயங்களும் கண்டறியப்பட்டுள்ளது.

சிசுவின் மரணம் இயற்கை மரணம் அல்ல என உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிசுவின் தந்தை வெளியூரில் தங்கி இருந்து வேலை செய்வதாகவும், தாயின் பராமரிப்பிலையே சிசு இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள தெல்லிப்பளை பொலிஸார் சிசுவின் தாயாரை பொலிஸ் பாதுகாப்பில் எடுத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில், பால் குடிக்க மறுத்து அடம்பிடிப்பதால் , குழந்தையின் கை, கால்களை திருகியதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தாயார் தெரிவித்துள்ளார்.

## முறையிடலாம்

ஜனாதிபதி தேர்தலின் போது பொலிஸ் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் முறைப்பாடுகளை அறிவிக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொலைபேசி இலக்கங்களை அறிவித்துள்ளது.

இதன்படி, 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள. இது தொடர்பில், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வழிகாட்டுதல்கள் ஒன்றை வெளியிட்டுள்ளது.

## தலவாக்கலை மாணவர்கள் நால்வரும் காலியில் மீட்பு

இந்த மூன்று மாணவர்களும், மாணவர்களும் காலி, மிட்டியாகொட பிரதேசத்தில் கருவாப்பட்டை தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைக்கு சென்றுள்ளதாகவும், குறித்த மாணவர்கள் 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்பதால் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அவர்கள் வேலைக்கு அமர்த்தவில்லை.

வேலை கிடைக்காததால், மாணவர்கள் குழு கிட்டத்தட்ட ஒரு மாதமாக தொழிற்சாலைக்கு சொந்தமான விடுதியில் தங்கியுள்ளனர்.

அவர்களிடம் இருந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொண்ட தலவாக்கலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று காலி பிரதேசத்திற்குச் சென்று மாணவிகள் மற்றும் மாணவர் மறைந்திருந்த இடத்தை அடையாளம் கண்டு மூவரையும் கண்டுபிடித்துள்ளனர்.

வீட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த மூவரும் வீடுகளை விட்டு ஓடியதாக தோட்டவாசிகள் தெரிவித்தனர். அந்த நால்வரும் வைத்திய பரிசோதனைகளுக்குப் பின்னர், நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

## மு.கா உயர்பீடத்தில் இருந்து பிரதிப் பொருளாளர் வெளியேற்றம்

உயர்பீடக் கூட்டம் மற்றும் அடுத்த உயர்பீடக் கூட்டம் ஆகிய இரு அமர்வுகளிலும் பங்குபற்றக்கூடாது என இடைநிறுத்துவதாகக் குறிப்பிட்டார்.

கட்சியில் யஹியாகானுடைய வகிபாகம் பற்றி பாராட்டியதோடு , இந்த முடிவை மனவருத்தோடு எடுக்கவேண்டிய நேர்ந்தது பற்றியும் தலைவர் தெரிவித்தார்.

தலைவரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு, அவருடன் கைகுலுக்கி , முன்மாதிரியான முறையில் யஹியாகான் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

## “46 நாட்களில் ஆயுள் நிறைவு”



பாராளுமன்றத்தில் இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 134 வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட தற்போதைய ஜனாதிபதிக்கு 92 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே இருப்பதாகவும் தனிப்பெரும்பான்மையைக் கூட அரசாங்கம் இழந்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், ஞாயிற்றுக்கிழமை (04) தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆயுட்காலம் இன்னும் 46 நாட்களில் முடிவடையும் என தெரிவித்த பீரிஸ், மாபெரும் கூட்டணி இம்மாதம் 8ஆம் திகதி உருவாக்கப்படும் என்றார்.

கொழும்பில், ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போதைய அரசாங்கம் நீதித்துறை மீது பாரிய தாக்குதலை நடத்தி வருவதாகவும், தற்போதைய ஜனாதிபதி நீதித்துறை அமைப்பின் நீதிபதிகளை பகிரங்கமாக விமர்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## “தமிழகத்தில் ஏற்படும் மாற்றத்தால் இலங்கையர்களுக்கு வாய்ப்பு”

எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும் என்றார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் வெள்ளிக்கிழமை (02) நடைபெற்ற யாழ்.மாவட்ட கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

தேர்தல் மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்ற கடன் பெற்றதாலேயே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதே தவறை மீண்டும் நடக்க அனுமதிக்காமல் புதிய பொருளாதார மற்றும் அரசியல் முறையில் முன்னேறிச் செல்வதற்கு பங்களிப்பது நாட்டிலுள்ள அனைத்து கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஏனையவர்களின் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் காலங்களில் தமிழ் நாட்டில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியுடன், மற்றவர்களுக்கு இல்லாத வாய்ப்புகள் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, “முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் அதன்பின்னர் வந்த அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளை குறைத்தது. இது அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்த தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன் சிங்கள, தமிழ் இனப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தாலும், அனைவரையும் சமமாக நடத்துவது மிகவும் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் இன மற்றும் மத குழுக்களிடையே சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமத்துவம் உள்ளது.

நாட்டில் ஒருபாதியாக இருக்கும் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும்.

மேலும் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் ஒன்றாக அபிவிருத்தி செய்ய வேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இருந்த போதிலும் பின்னர் அது பின்தங்கிப் போனது. இப்போது போர் முடிந்துவிட்டது. எனவே யாழ்ப்பாணத்தையும் வடமாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது என்றார்.

## “நாமலின் தவறால் வீடுகள் எரிந்தன”

எனது வீடுகள் எரிக்கப்பட்ட போது, அத்துகோரல எம்.பி தனது உயிரை தியாகம் செய்ய நேர்ந்த போதும் நாமல் ராஜபக்ஷ எம்.பி உள்ளிட்டோரின் தவறான செயற்பாடுகளே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

“ நாமல் ராஜபக்சவுக்கு வரலாறு தெரியாது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராக இருந்தபோது தனது தந்தைக்கு ஜனாதிபதி வேட்பாளர் கொடுக்க சந்திரிகா பண்டாரநாயக்க தயாராக இல்லை. அப்போது, மகிந்த ராஜபக்சவின் பெயரை நான் முதலில் நானே பரிந்துரைத்தேன் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

“அப்போது நான் மிகவும் சிரமப்பட்டேன், ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து திருமதி சந்திரிகா என்னைத் திட்டினார். அது மட்டும் அல்ல. அவருடைய சித்தப்பாவை ஜனாதிபதியாக்க உதவினேன் என்றார்.

செஹான் சேமசிங்க மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டமை நல்லது என நாமல் ராஜபக்ஷ கூறுவதை நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்களின் தவறான செயல்களால் தான் இதுபோன்ற சூழ்நிலைகளை சந்திக்க நேரிட்டது.

நாமல் ராஜபக்ஷவின் தவறான பணியினால்தான் அத்துகோரள போன்றவர்கள் அன்றைய தினம் உயிர் தியாகம் செய்ய நேரிட்டது. போராட்ட தினத்தில் நாங்கள் கூட்டங்களை நடத்தி செய்த காரணத்தால் தான் அந்த நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது என்றார்.








# சமுத்திர தீர்த்தோற்சவம்

வீ.ரி. சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ சமுத்திர தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது.

# “வாக்களிப்பது கடமை”

நூருல் ஹுதா உமர்

எமது வாக்கு நமது உரிமை என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது ஆனால் இம்முறை வருகின்ற தேர்தலில் எமது வாக்குரிமையை நமது கடமையாக நினைத்து வாக்களிக்க வேண்டிய நேரம் வருகிறது. என்று அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் தெரிவித்துள்ளார்

தலைவன் சரியில்லை என்றால் அந்த சமூகமும் நாடும் சீரழிந்து விடும் என்பதற்கு எமது நாடு உலகிற்கு சிறந்த உதாரணமாகும். அதனால் சிறந்த சிந்தனையால் மக்களை சிறப்பாக வாழ வைக்கக்கூடிய நல்லொழுக்கம் உடைய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான உரிய நேரம் நெருங்கி வந்துள்ளது என்றார்.

அத்தோடு தனக்கு வாக்களித்த மக்களை மறந்து நாட்டை சூறையாடிய அரசியல்வாதிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்குவதற்குரிய நேரம் நெருங்குகிறது என எஸ்.எம் சபீஸ் தெரிவித்துள்ளதுடன் எமது சந்ததிகளின் எதிர்காலத்துக்காக கடமை உணர்வுடன் மக்கள் வாக்களிக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.



# யாழில் சர்வமத ஆசி பெற்றார் ஜனாதிபதி





யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நல்லை ஆதீனம் ஸ்ரீ சோமசுந்தரத்தை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

வெள்ளிக்கிழமை (02) சென்றிருந்த ஜனாதிபதி, யாழ்.ஆயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்று யாழ்.ஆயர் அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதனைடுத்து யாழ். நாக விகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

புனித தலத்தை சென்றடைந்த ஜனாதிபதி முதலில் புத்த ஸ்தூபிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி மீகஹஜந்துரே சிறிவிமல நாயக்க தேரரைச் சந்தித்து நலன் விசாரித்தார்.

“பௌத்த இந்து சமய மன்றம்” சார்பில் அதன் தலைவர் கலாநிதி எம். மோகனையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# காத்தான்குடியில் கையெழுத்து வேட்டை



எம் எஸ் எம் நூர்தீன்

34 வது வருட சுஹதாக்கள் ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்படும் நிலையில், கொரோனா காலத்தில் ஜனாஸாக்களை கட்டாய தகனம் செய்தல் தொடர்பான பக்க சார்பற்ற முறையில் விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி காத்தான்குடியில் கையெழுத்து பெறும் நடவடிக்கை சனிக்கிழமை (03) முன்னெடுக்கப்பட்டது.

கொவிட் 19 தொற்று நிலவிய காலப்பகுதியில் முஸ்லிம்களுடைய ஜனாஸாக்கள் கட்டாயமாக தகனம் செய்யப்பட்டது

இது தொடர்பாக அரசாங்கம் நீதியான விசாரணை ஒன்றை நடத்தி தகனம் செய்ய காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திய மகஜர் ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதற்கான கையெழுத்து பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமும் தேசிய ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனமும் இணைந்து ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கை அடங்கிய மகஜரை கையளிக்க உள்ளதாக தேசிய ஷுஹதாக்கள் ஞாபக நிறுவனத்தின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான சட்டமாணி முகம்மட் றுஸ்வின் தெரிவித்தார்.

# சிகரெட்டுக்களுடன் கல்முனைவாசி கைது



வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 18 லட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு வந்த கல்முனை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவர், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் பயணப் பையை சோதனையிட்ட போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12,000 “கோல்ட் லீஃப்” ரக சிகரெட்டுகள் அடங்கிய 60 சிகரெட் பண்டல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகையை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கௌபி விநியோகித்தவருக்கு 5,000 ரூபாய் தண்டம்

எம்.எஸ்.எம்.ஹனீபா

சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றின் மாணவர்களுக்கு நுகர்வுக்கு பொருத்தமில்லாத கௌபி விநியோகித்த உணவு வழங்குநருக்கு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் 5000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம். கபீர், ஞாயிற்றுக்கிழமை (04) தெரிவிக்கையில், மாணவர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்மாந்துறை வலய கல்வி அலுவலக இலவச மதிய உணவு குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது புழு குற்றிய கௌபி பயறு காணப்பட்டது என்றார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டும் எனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.



# யாழில் ஊடகவியலாளர்களை சந்தித்தார் ஜனாதிபதி



இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டியது அவசியமென்பதை தான் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சனிக்கிழமை (03) பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பணிமனைக்கு சென்றிருந்தோடு, அதன் ஊழியர்களையும், ஏனைய ஊடகவியலாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது உதயன் பத்திரிகை பணிமனையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தலைமை ஆசிரியர் த. பிரபாகரன் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

அதனையடுத்து ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கினார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்பதே முதல் பிரச்சினையாக இருந்ததாகவும், கடந்த ஜூன் மாதத்தில் அந்த பிரச்சினையை நிறைவுக்கு கொண்டு வர முடிந்திருந்தமையினால் தற்போது ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது குறித்து சிந்தித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் போது இளைஞர்கள் பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பிலான கோரிக்கைகளையே முன்வைத்தனர். அதனால் வடக்கிலும், தெற்கிலும் உள்ள இளையோரின் எதிர்பார்ப்புக்களில் வேறுபாடுகள் தெரியவில்லை என்றும் கூறினார்.

மாகாண சபைகளை வலுவூட்டி அந்தந்த மாகாணங்களின் அபிவிருத்திக்கான பரந்தளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தனது எதிர்பார்ப்பாகும் என தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கம் உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

# மனைவியை குத்திய கணவன் கைது

சுமணசிறி குணதிலக்க

தம்பதியினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது 18 வயதுடைய மனைவியை, கணவன் கத்தியால் குத்தியுள்ள சம்பவம் மொனராகலை தெனகல்லந்த பகுதியில் சனிக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்தால் பாதிக்கப்பட்ட மனைவி, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 30 வயதுடைய கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விற்பனைக்கு

ராஜகிரியவில் பிரதான வீதிக்கு 1 கிலோமீற்றர் தூரத்தில், பெறுமதியான 6 பேர்ச் காணி, விற்பனைக்கு உண்டு, ஒரு பேர்ச் 22 இலட்சம். விலை பேசி தீர்மானிக்கப்படும். அழையுங்கள் 0703157020

# லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் வெட்கக்கேடான செயல்

அரசு துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறைகளாக இருந்தாலும் சரி, ஒரு வேலையைச் செய்து கொள்வதற்கு முறைமையொன்று இருக்கும். அதன் செயற்பாடுகள் மெதுவாக நகரும். ஒரு சில சந்தர்ப்பங்களில் வரிசையாக நின்றே ஆகவேண்டும். அரச திணைக்களங்கள், காரியாலயங்களில் வரிசைக்கு குறைவே இருக்காது.

எனினும், பலரும் வரிசைகளில் நிற்பதற்கும், தங்களுடைய தேவைகளை முறையாக செய்து கொள்ள காத்திருக்காமல், குறுக்கு வழியில் நாடுகின்றனர். இதனால், பலரும் சிக்கி தவிக்கின்றனர். நமது நாட்டை பொறுத்தவரையில், லஞ்சம் வாங்குதல் கொடுத்தலும் மலிந்து கிடக்கின்றன.

அடி மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் லஞ்சத்துக்கு குறைவே இல்லை. சின்ன, சின்ன வேலைகளை செய்து கொள்வதற்கு லஞ்சத்தை எதிர்பார்ப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. போக்குவரத்தை பொருத்தவரையில், போக்குவரத்து குற்றங்களுக்கான தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டதை அடுத்து போக்குவரத்து லஞ்சம் கூடிவிட்டது.

புற்று நோயைப் போல லஞ்சம் என்பது சமூகம் முழுவதும் பரவியுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பல அரசு நிறுவனங்களுக்கு எதிராக மென்மேலும் அதிகரித்து வருகின்றன. கிராம சேவகர்களுக்கு எதிராக லஞ்சம் வாங்கும் குற்றச்சாட்டுகள் அதிகமாக காணப்படுகின்றன.

பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்கான லஞ்சம் சகஜம் என்பது இரகசியமல்ல. லஞ்சம் என்பது பணமாக மட்டுமல்ல, பாலியல் ரீதியாகவும் இருக்கிறது. பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதற்காக பிள்ளையின் தாயை அறைக்கு அழைத்திருந்த அதிபர் ஒருவர் சட்டத்தின் பிடியில் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் சிக்கியிருந்தார். தரம் 1 க்கு பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்காக, அதிபர்கள் பலர் லஞ்சம் வாங்குவதாக குற்றச்சாட்டுகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் தலைமை அதிகாரி ஒருவர் லஞ்சமாக பெற்ற பணத்தை எண்ணும் போது லஞ்ச வலையில் சிக்கியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லஞ்சத்துக்கு பயம்-சந்தேகம், பதட்டம், கூச்சம் எதுவும் இல்லை என்பது லஞ்சத்தின் அளவைப் பார்த்தால் தெளிவாகத் தெரிகிறது. மேலும் அது சமூகத்தில் இயல்பாகப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலை. பணத்தைக் காட்டாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற மிக மோசமான நிலையை நாடு எட்டியுள்ளது.

சிலர் சில தந்திரங்களை செய்வதன் மூலம் தங்கள் கடமைகளை எளிதாகச் செய்ய ஆசைப்படுகிறார்கள்.

கடமைகளை நிறைவேற்றுவதற்கு குறிப்பிட்ட முறையான அமைப்பு இல்லாததே இதற்குக் காரணம். மேலும் அந்த கடமைக்காக எடுக்கும் நேரத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் சில அரசு அலுவலகங்கள் 'முறைக்கேடானவர்களால்' நிரம்பி வழிகின்றன.

ஒருங்கிணைப்பு செயலாளரும், வர்த்தகத்துறை அமைச்சரின் உறவினரும் லஞ்சம் வாங்கிய விவகாரத்தில், அரசியல்வாதிகளின் நெருங்கிய சீடர்கள் லஞ்சம் வாங்குவதில் தீவிரம் காட்டுவது தெளிவாகிறது.

சில சமயங்களில் தங்களுக்குப் பணம் கிடைக்காது, அமைச்சருக்கு தான் என்று சொல்லி லஞ்சம் வாங்கலாம். எனவே, அரசியல்வாதிகளுக்கும் தம்முடன் நெருங்கிப் பழகும் மக்கள் மீது பொறுப்பு உள்ளது என்பதை நினைவில் கொள்க.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நான், உறங்க விரும்புகின்றேன். நெஞ்சத்தின் எண்ணங்களை நிறுத்திவிட்டு, ஓயாமல் உட்புகும் மாசுகளைத் துடைத்தெறிந்து, புதுநிலைக்குக் கொண்டுவந்தா தான் நிம்மதி.

நிர்மலமான நிலை எளிதல்ல! ஆனால், அதை அடைந்தேயாக வேண்டும். சொந்தப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. ஆயினும், உலகப் போக்கை உணராது எப்படி இருப்பது?

சுற்றியிருக்கும் மக்களை, ஜீவராசிகள் படும் அவஸ்தைகளைக் கண்டும் கேட்டும் மௌனமாக இருக்க முடியுமா? ஏகாந்த நிலையில், சரீரம் வானில் பறந்து செல்வது போலிருக்கும். ஆயினும், சின்னத் துயர் மோதினால், மனம் மீண்டும் உலகுக்குள் பிரவேசித்துவிடுகின்றது.

நிர்மலமான நிகழ்வைச் சிருஷ்டிக்க, அகமும் புறமும் மௌனமாக நிர்ச் சிந்தனைக்குள் ஆட்பட்டேயாக வேண்டும். பாரங்களை உடைத்தெறிந்து, ஆன்மாவுக்கும் தேகத்துக்கும் நிம்மதியை வழங்க வேண்டுமல்லவா?

மனஒடுக்கம், தியானம், அகத்தின் மீதான நம்பிக்கை, சுடராக எழவேண்டும். எம்மால் எதுவும் முடியும், தௌவான ஞானத்தைத் தேடுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# புதிதாக ஒன்றுமில்லை!

**லக்ஸ்மன்**

தமது கட்சியின் வெற்றி வாய்ப்பு குறித்து இன்னமும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இருப்பதானது அவர்களின் அரசியல் அளவீட்டுப் பிரச்சினையாகும். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தம்முடைய கட்சியின் இருப்பை மையப்படுத்தியதாகவே அக்கட்சி நகர்வுகளை முன்னெடுத்திருந்தது.

சிலவேளைகளில் ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படலாம் என்ற அச்சம் இருந்து கொண்டேயிருந்தது. ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டவுடன் தாம் ரணிலுக்கு ஆதரவில்லை என்று பகிரங்கமாக அறிவித்தது. இருந்தாலும் அக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தினைக் கருத்தில் கொள்ளும் வகையில்தான் ரணிலுக்கான ஆதரவினை அறிவித்திருந்தனர்.

ஆனால், அவ் உறுப்பினர்களின் உறுப்புரிமைப்பிரச்சினையை சிறிலங்கா பொதுஜன பெரமுன கிளப்பிவிட்டதனையடுத்து அவர்கள் ஒரு குழப்பத்துடன்தான் இப்போது இருந்துவருகின்றனர். பல தடவைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரமுனவை தனக்கு ஆதரவு வழங்குமாறு கோரியபோதிலும் அது கைகூடவில்லை.

அதனாலேயே அவர் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தினை அவர் செலுத்தினார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி சார்பிலும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக மக்கள் விடுதலை முன்னணி ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் போட்டியிடவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்புக்கள் தேசிய அரசியலில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இவ் வேட்பாளர்களிடம் இருக்கின்ற பொது உறுதியளிப்புகள் பற்றி சிறுபான்மைக் கட்சிகள் முடிவுகளை வினவியவண்ணமிருக்கின்றன. இந்த வினவல்களுக்கு இன்னமும் உறுதிப்பாடுகள் கிடைக்காத நிலை காணப்படுகிறது.

பெரும்பான்மை மக்களின் வாக்குகளை இலக்கு வைக்கும் பிரதான வேட்பாளர்கள் அதே நேரத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளையும் தம் தரப்புக்கான வெற்றிவாய்ப்புக்குத் தேவையானதாகவே பார்க்கின்றனர். இதில் ரணில் விக்கிரமசிங்கவும் அடங்குகிறார். அந்தவகையில்தான் அவர் வடக்கு, கிழக்குக்கான தனது விரைவான விஜயங்களை அவர் மேற்கொள்கிறார்.

தமிழ் மக்கள், மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோர் சார்ந்து அரசியலை மேற்கொள்கின்ற கட்சிகள் தமது மக்களுக்கான உரிமைசார் விடயங்களை முன்னிறுத்தியே ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆதரவுகளை வழங்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றன.

மலையக மக்களின் விடயங்களுக்கான ஒருமைப்பாட்டுக்கு வந்திருக்கின்ற தமிழர் முற்போக்கு கூட்டணி தமது ஆதரவினை எதிர்க்கட்சித் தரலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கும் வகையிலான முடிவுக்கு வந்திருப்பது போலான பிரதிபலிப்புகள் வெளியாகியிருக்கின்றன.

அதே நேரத்தில் தற்போது அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருக்கின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தம்முடைய ஆதரவினை தற்போதைய ஜனாதிபதிக்கே வழங்கவேண்டிய கடப்பாட்டில் உள்ளனர். அமைச்சுப் பதவி மற்றும் கிழக்கு மாகாணத்துக்கான ஆளுனர் ஆகியவற்றினை ரணிலிடமிருந்து பெற்றுக்கொண்டவர்கள் என்றவகையில் அவர்களுக்கு வேறு வழியில்லை. வடக்கு கிழக்குத் தமிழர்களைப் பெறுத்தவரையில் வடக்கினைப் பெறுத்தவரையில் தற்போது அமைச்சராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தாவினுடைய ஆதரவு தற்போதைய ஜனாதிபதிக்கே என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஈ.பி.டி.பி கட்சிக்கு வடக்கில் மாத்திரமல்ல கிழக்கிலும் ஓரளவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவிருக்கிறது என்றே கொள்ள முடியும்.

அடுத்து தற்போதைய அரசாங்கத்தில் இருக்கின்ற அங்கஜன் ராமநாதனின் முடிவு பொதுஜன பெரமுனவின் முடிவிற்குள் அகப்பட்டுமிருக்கின்ற நிலையில் அவரது முடிவு இறுதி நேரத்திலேயே தெரியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிக் கூட்டணியிலேயே அவர்களும் இருக்கின்றனர். அந்தவகையில், பொதுவான ஆதரவு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கே கிடைக்கக் கூடும். ஆனால், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகள் தமிழ் பொதுவேட்பாளர் குறித்த பிடிக்குள் இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் கூட்டணி இந்தப் பிடிப்புக்குள் இருந்தாலும், இரண்டாவது வாக்கை ரணிலுக்கு வழங்கல் என்ற முடிவில் இருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தத் தேர்தலை பகிஸ்கரித்தல் என்ற முடிவில் இருக்கிறது. வடக்கு கிழக்கிலுள்ள அரச தரப்பு தவிர எதிர்க்கட்சியாக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இம்முறை ரணில் விக்கிரமசிங்க கோடிக் கணக்கில் ஒதுக்கீடுகளை வழங்கினார். இது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் செலுத்தவே செய்யும். அந்தவகையில், தமிழ்த் தரப்பின் ஆதரவு எப்படியிருக்கும் என்பது நிச்சயமற்றதே.

ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிர்க்கட்சி கூட்டணியில்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஏதோ ஒருவகையில் சஜித் பிரேமதாசவுக்கே ஆதரவு வழங்குவார்கள்.

அதேநேரத்தில் அமைச்சராக இருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து உறுப்புரிமை நீக்கப்பட்ட ஹபிஸ் நசீர் அகமட் தற்போது வடமேல் மாகாணத்தின் ஆளுநராகச் செயற்பட்டு வருகிறார். இவருக்கு ஒரு தொகுதி முஸ்லிம்களின் வாக்கு பலம் இருக்கிறது என்ற நம்பிக்கையலேயே ரணில் விக்கிரமசிங்க ஆளுநர் பதவியை வழங்கியிருந்தார். அந்தவகையில் அவருடைய ஆதரவு ரணிலுக்கே இருக்கப்போகிறது. வடக்கைப் பொறுத்தவிரையில் தற்போது அமைச்சுக் கூட்டில் இருக்கின்ற காதர் மஸ்தான் ஜனாதிபதிக்கே தன்னுடைய ஆதரவினை வழங்குவார். அவ்வாறானால், முஸ்லிம் மக்களின் ஒருபகுதி ஆதரவு ரணிலுக்கு கிடைக்கும் என்று நம்பலாம்.

நாட்டுக்காக கடுமையான முடிவுகளை எடுப்பதிலிருந்து விலகமாட்டேன் என்று தெரிவிக்கின்ற ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய வெற்றிக்காக எந்த நிலைக்கும் செல்வார் என்கிற எதிர்வுகூரல்கள் வெளிவருகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஏற்பட்ட முரண்கள் காரணமாக தன்னுடைய தாய்க் கட்சியான ஐக்கி தேசியக் கட்சியிலிருந்து விலகி சஜித் பிரேமதாச போட்டியிட்டிருந்தார். அதனால் ரணில் அவருடன் கோபத்துடனேயே இருக்கிறார். இருந்தாலும் அவரை மீண்டும் கட்சியில் இணைப்பதில் அக்கறையாகவே இருக்கிறார். இருந்தாலும் அந்த நம்பிக்கை இதுவரையில் கைகூடவில்லை. அது கைகூடாத நம்பிக்கையாகக்கூட போய்விடலாம்.

தம்முடைய அரசியல் அபிலாசைகளின் நிறைவேற்றம் ஒன்றையே தாரக மந்திரமாக கொண்டிருக்கின்ற தமிழர்களும், அவர்களுடைய அரசியலை நகர்த்துகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளும் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டேனும் அதனை அடைந்து கொள்ளவே எண்ணுகின்றனர்.

ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் ஒருவகையில் அதற்கான காய் நகர்த்தலே என்பது வெளிப்படையானது. புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்களும் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புகளும், புத்திஜீவிகளும், இன்னும் பலரும் இணைந்து இந்த நகர்த்லை மேற்கொள்கின்றனர். ஆனால் இது தேவையற்ற, வீணான, ஆபத்தான முயற்சி என்ற விமர்சனங்கள் வந்தவண்ணமேயிருக்கின்றன. ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட வேளை மக்களிடமிருந்த அரசியல் ஈடுபாட்டுக்கும் தற்போதைய நிலைக்கும் வித்தியாசமிருக்கிறது. இது தமிழ்த் தேசிய உணர்வில் தாக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அதனால் இது கைகூடாது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

யுத்தம் மௌனிக்கப்பட்ட கையோடு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்பதற்காக அந்த யுத்தத்தை வழிநடத்திய பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் மஹிந்தவை எதிர்க்கவேண்டும் என்பதற்காக ரணிலின் ஆதரவில் நிறுத்தப்பட்ட மைத்திரிபாலவுக்கு தமிழர்கள் வாக்களித்தார்கள். கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழிநடத்திய கோத்தபாயவுக்கு எதிராக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தார்கள்.

தொடர்ச்சியாக எதிர்ப்புணர்வினையே காண்பித்து வந்து கொண்டிருந்த தமிழர்கள் அக்காலங்களிலிருந்து உணர்வெழுச்சிகள் அடங்கிப் போயிருக்கின்றன, அடங்கிப் போய்க்கொண்டிருக்கின்ற நிலையில் இவ்வாறு ஒரு விசப்பரீட்சைக்கு இந்தத் தேர்தலில் முயல்கிறார்கள். இந்த முயற்சி யாருக்கு ஆதரவு என்பதே புதிர்.

புழமையான, ஆரம்பகால தேசியக் கட்சிகள் பெரும்பான்மையுடன் எந்தத் தேர்தலிலும் வெற்றிபெறாத ஒரு அரசியல் சூழல் இலங்கையில் உருவாகிவிட்டது. அதற்கு கடந்த பல தேர்தல்கள் உதாரணமாகும். அரசியலுக்காக மக்களை அணிதிரட்டுவதற்கு இனவாதம், ஊழல், மோசடி, நாட்டின் முன்னேற்றம் போன்ற பல விடயங்கள் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால். இவற்றில் இனவாதம் வென்றுவிடுவதை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் கண்டிருக்கிறோம்.

இருந்தாலும் மக்கள் போராட்டமான அரகலயவிற்குப் பின்னர் நடைபெறும் இத்தேர்தலில் இனவாதம் தன்னுடைய கரத்தினை உயர்த்தாமலிருக்கவேண்டும் என்று நம்பிக்கை கொள்வோம். இல்லையானால் நிலைமை மிகவும் மோசமானதாகவே இருக்கும்.

ஏதோ ஒரு நிச்சயமான நம்பிக்கையுடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறார் என்பது மாத்திரம் உண்மை.

இருந்தாலும் அவருடைய வெற்றி எவ்வாறு சாத்தியமென்பது நிச்சயப்படுத்த முடியாததே. பிளைப்புக்காக பிழைத்துப்போகும் அரசியல்களையும் முயற்சிகளையும் நடத்துகின்றவர்கள் அங்கம் வகிக்கின்ற இந்த அரசியல் களம் திறந்து விட்டிருக்கும் வெளி யாருக்காகத் திறந்திருக்கும் என்பது புதிதாக ஒன்றுமில்லாத சூழலில் எதுதான் வெற்றியை நிச்சயிக்கும்.?

## கடிதங்கள்

### துரித ரயில் சேவை வேண்டும்

கொவிட் பரவலுக்கு முன்பிருந்து மாத்தளையிலிருந்து அதிகாலை 4.40 மணிக்கு மாத்தளை-கொழும்பு கோட்டை வரையான விசேட ரயில்சேவையொன்று தினசரி இடம்பெற்றுவந்துள்ளது.

இச்சேவை காரணமாக கொழும்பு செல்லும் பயணிகள் (பயணப்பைகளுடன்) பெரிதும் நன்மையடைந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது அவ்வாறான இச்சேவை சில காலங்களுக்கு முன் முன்னறிவித்தலின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கொழும்பு செல்லும் பயணிகள் மாத்தளை - கண்டி வரை புறப்படும் ரயிலில் சென்று அங்கு நிறுத்தப்பட்டுள்ள கொழும்பு செல்லும் ரயிலில் பயணிக்கும் நிலையேற்பட்டுள்ளது

பயணப்பொதிகளுடன் செல்லும் பயணிகள் இதனால் பெரிதும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரங்களில் இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நான்கு நாட்களே சேவையிலீடுபட்டாலும் அதுவும் எதுவித முன்னறிவித்தலுமின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்து பயணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்

எனவே ரயில்வே திணைக்களம் இதுகுறித்து அவதானம் செலுத்தி கொழும்புக்கான ரயில்சேவையை தடையின்றி நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ.எம் .ஜலீல்

# “சமிக்ஞையை மதிப்போம்”

## சர்வதேச போக்குவரத்து ஒளி தினம் இன்றாகும்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி/ தூதுவர்



இன்று சர்வதேச போக்குவரத்து விளக்குகள் நாளாகும். (International Traffic Light Day) உலகில் போக்குவரத்து விளக்குகள் ஸ்தாபிக்கப்பட்டு இன்றுடன் 110 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

புதிய போக்குவரத்து விளக்குகள் கிளீவ்லேண்டிலுள்ள, இலக்கம் 105, இலுசிட் அவென்யூ என்னுமிடத்தில் அமெரிக்க போக்குவரத்து ஒளி நிறுவனத்தால் ஐந்தாம் ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1914 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

முதன் முதலாக ஜேம்ஸ் ஹக் என்வரால் இந்த விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டதால், அன்றைய தினத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

ஆயினும், கர்ரட் மார்கன் என்பவர் தான் “போக்குவரத்து விளக்குகளின் தந்தை" எனக் கருதப்படுகின்றார்.

1925 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அனைத்து போக்குவரத்து விளக்குகளும் இவரது திட்டத்தின் படியே கட்டப்பட்டு இன்றும் தொடர்ந்து செல்கின்றன.

போக்குவரத்து விளக்கு என்பது எம் அனைவருக்கும் நன்கு பரிச்சயமான ஒன்றாகும்.

வாகனங்கள், பாதசாரிகள், ஆகியோர்களின் இயக்கத்தை நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, வழிவிடும், ஒரு நடவடிக்கையில் இவ்விளக்குகள் ஈடுபட்டிருக்கும்.

இதன் மூலமாக வாகனப் போக்குவரத்துக்கள் இடையூறின்றியும், விபத்துக்களின்றியும், செயல்பட முடிகின்றது.

உலக நாடுகளில் இன்று வெவ்வேறுபட்ட போக்குவரத்து விளக்குகள் நிறுவப்பட்டுள்ளமையால், பாதசாரிகளும் துவிச்சக்கர ஓட்டுநர்களும் , குதிரை ஓட்டுனர்களும், பாதையைக் கடப்பதற்கும், வாகனங்கள் பாதுகாப்பாக செல்வதற்கும், இவைகள் பெரிதும் துணை நிற்கின்றன.

இன்று உலகிலுள்ள பல்வேறுபட்ட நகரங்களிலும், போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை, சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப அதிகரித்துள்ளமையால், போக்குவரத்து விளக்குகளின் எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

வியன்னாவில் மிதிவண்டிகளுக்கென தனியான போக்குவரத்து விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இவ்வாறு நிறுவப்பட்டதனை நாம் நோக்கலாம்.

இந்த விளக்குகளில் சைக்கிள் அடையாளம் இடப்பட்டு இருக்கும்.

பாதசாரிகள் கடப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து விளக்குகளில் மனிதனை ஒத்த உருவம் கொண்ட சைகை அமைக்கப்பட்டிருக்கும்.

புகையிரதக் கடவையைக் கடக்கின்ற இடங்களில், அதற்கேற்ற ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டு இருப்பதனை எம்மால் நோக்க முடியும்.

தென் கொரியாவில் விழிப்புணர்வு அற்றவர்களுக்காக ஒரு போக்குவரத்து ஒளி விளக்கினை உருவாக்கி இருக்கிறார்கள்.

எமது நாடான ஸ்ரீ லங்காவில் முதலாவது போக்குவரத்து விளக்குகள் 17ஆம் திகதி செப்டம்பர் மாதம் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

முதன் முதலாக பிளவர் ரோட் ( Flow Road), கிறீன்பாத் சந்தி ( Greenpath Junction), கின்சி ரோட் ( Kynsey Road), ஹொர்டன் பிளேஸ் சந்தி ( Horton Place Junction), காசல் வீதி (Castle Street), சேனநாயக்க வீதி சந்தி (Senanayake Road Junction) ஆகிய இடங்களிலேயே நிறுவப்பட்டன.

இவற்றை நிறுவுவதற்காக அக்காலத்தில் ஏற்பட்ட செலவு சுமார் 40,000 ஸ்டேர்லிங் பவுண் எனவும், இவைகள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இன்று இவ்விளக்குகள் எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டுப் பொருத்தப்படுகின்றன .

இலங்கை வீதி அபிவிருத்தி அதிகார சபையானது மொரட்டுவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இதனை செயற்படுத்துகின்றது.

உலக நாடுகளில் தற்போது அதிகளவான வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி, வாகன போக்குவரத்து விபத்தின் மூலம் சுமார் 1.35 மில்லியன் மக்கள் மரணமடைவதாகவும், 50 மில்லியன் மக்கள் காயமடைவதாகவும் அறிய முடிகின்றது.

இதற்கு காரணமாக சாரதியின் கவனயீனம், சுகமின்மை, வாகனம் செலுத்தும் பொழுது தொலைபேசியை கையாளுகின்ற நிலைமை, உறங்குநிலை, அதிகூடிய வேகம், குடிபோதை, போதைவஸ்து பயன்படுத்தி வாகனம் செலுத்துதல், ரேடியோ, தொலைக்காட்சி ஒலியை அதிகரித்து வைத்தல், போக்குவரத்து குறியீடுகளை அலட்சியம் செய்தல், போன்றவற்றால் விபத்துக்கள் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது.

இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் 1103 வாகன விபத்துகளும் அதில் 1154 உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன .

பேரூந்தின் கொள்ளளவு சக்தியினை விட , அளவுக்கு அதிகமான பிரயாணிகளின் எண்ணிக்கை, வாகன சாரதியின் தூக்க கலக்கம், பேரூந்தில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு, முறையான பராமரிப்பற்ற தன்மை என்பன கூட இத்தகைய விபத்துகளுக்கு காரணங்களாக அமைந்திருக்கின்றன.

பாதசாரிகளும் கூட பொறுப்பற்ற முறையில் பாதைகளைக் கடப்பதனை நானும் பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளேன்.

சில வேளைகளில் நாமும் கூட எமது அறியாமை காரணமாகவும், அவசரப் புத்தியின் காரணமாகவும் பாதையை விரைவாக கடக்க வேண்டுமென நினைத்து, போக்குவரத்து செய்கைகளை உதாசீனம் செய்வதனை வழமையாகக் கொண்டுள்ளோம்.

விரைவாகப் பாதையைக் கடக்க வேண்டும் என்ற ஒரு அவசர மனப்பாங்கில் செயல்படுவதே இதற்குக் காரணமெனக் கூறலாம்

விபத்துக்கள் ஏற்படும் பொழுது, அதனால் ஏற்படும் இழப்புக்கள் அனேகம். ஊனமுற்றோர், காயமுற்றோர், கைவிடப்பட்டோரென பல தரப்பினர் உருவாவதோடு, அவர்களது இழப்பு, தனிக் குடும்பத்திற்கு மாத்திரமன்றி, உறவினர்களுக்கும், நாட்டிற்கும், அதனது பொருளாதாரத்திற்கும் பாதகம் விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

வாகனப் பயணத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் எப்பொழுதுமே போக்குவரத்து விளக்குகளில் கவனம் செலுத்துவதோடு, போக்குவரத்து குறியீடுகளை அலட்சியம் செய்யாமல் நிதானமாக, மெதுவாக, அவதானத்துடன், வாகனத்தை செலுத்துதல் அவசியமாகும்.

இதனால், பல உயிர்களைக் காப்பாற்ற முடிவதோடு, தம்முடைய உயிரையும், காப்பாற்றிக் கொள்ள முடிகின்றது. தனது குடும்பத்தினரை சிந்தித்து வாகனம் ஓட்டும் போது, அதனை நிதானத்துடனும், அவதானத்துடனும் செலுத்த முடிகின்றது.

பாதசாரிகளும் மிகப் பொறுப்பான முறையில் பாதையை கடக்க கற்றுக் கொள்வது அவசியமாகும்.

பெற்றோர்களும். வயதில் மூத்தவர்களும். பாடசாலைகளும் , மாணவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் போக்குவரத்து விதிமுறை தொடர்பாகவும், போக்குவரத்து விளக்குகளின் வர்ணங்கள் தொடர்பான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் சிறுவயதில் இருந்து தெளிவுபடுத்துவது மிகவும் அவசியமாகும்.

இலங்கையில் போக்குவரத்து சவால்களை சமாளிப்பதற்காக ஒரு விரிவான அணுகுமுறை அவசியப்படுகின்றது. போக்குவரத்து விளக்குகள் சம்பந்தமான அறிவினை கொள்கை வகுப்பாளர்களுக்கும், சட்ட ஒழுங்கமைப்பாளர்களுக்கும் , வாகன ஓட்டுநர்களுக்கும், பாதசாரிகளுக்கும், புகட்டுவதன் மூலம் ஒரு முன்னேற்றத்தினை ஏற்படுத்தலாம். வாகனம் ஓட்டுவதற்கான அனுமதி பத்திரங்கள் வழங்குகின்ற பொழுது வாகன சாரதிகளுக்கு மனித உயிர்களின் முக்கியத்துவத்தினை உணர்த்துதல் அவசியம். பொறுமை, கருணை, பச்சாதாபம் , ஒத்துழைப்பு ஆகிய நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் விபத்துக்களை தவிர்க்க முடியுமென வலியுறுத்தல் அவசியமாகும்.

சமிக்ஞை விளக்குகள் இருக்குமிடத்தில், யாசகம் கேட்கும் யாசகர்களால் போக்குவரத்து பாதிக்கப்படுவது மட்டுமல்லாது பல்வேறு பிரச்சினைகளும் உருவாகின்றன. இதனை தடுப்பதுவும் இன்றைய கால கட்டத்தில் அவசியமாகின்றது.

சிறந்த போக்குவரத்து முறைகளை பின்பற்றுவோம்.

வாகனங்களை மெதுவாக செலுத்தி விபத்துக்களைத் தவிர்ப்போம்

உயிர்களின் பெறுமதியை மதிப்போம் !

விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பதிவாக எண்ணி, சக மக்களிடம்,தனது தாற்பரியங்களை எடுத்துரைப்போம்.

# 187,000 க்கு அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை



கொவிட் தொற்றுப் பரவலுக்கு பின்னரான சூழலில், இவ்வாண்டில் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில், ஜுலை மாதத்தில் மொத்தமாக 187,810 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். அதனூடாக, 2024 ஜுலை மாதம் வரையில் மொத்தமாக 1.19 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டின் ஜுலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 31 சதவீத அதிகரிப்பை இவ்வாண்டு பதிவு செய்திருந்தாலும், 2018 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் பதிவாகியிருந்த 217,829 சுற்றுலாப் பயணிகள் எனும் எண்ணிக்கையை விட 14சதவீதம் குறைவானதாக அமைந்துள்ளது.

தினசரி சராசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை 6058 ஆக பதிவாகியிருந்ததுடன், ஜுன் மாதத்தில் இந்த எண்ணிக்கை 3,782 ஆக பதிவாகியிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) ஜுலை மாதத்துக்காக எதிர்வுகூரியிருந்த 220,599 எனும் எண்ணிக்கையை விட, வருகை தந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவானதாகவே அமைந்துள்ளது.

ஜனவரி முதல் ஜுலை மாதம் வரை எதிர்வுகூரப்பட்ட பெறுமதியை விட வீழ்ச்சி சதவீதம் முறையே 13.9%, 8.4%, 11.4%, 18.5%, 14.4%, 23% மற்றும் 15% ஆக பதிவாகியிருந்தது.

ஜுலை மாதத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 41,173 ஆக பதிவாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து வருகை தந்திருந்தவர்களின் எண்ணிக்கை 20,837 ஆக பதிவாகியிருந்தது. சீனாவிலிருந்து 13,040 பேர் வருகை தந்திருந்தனர். நெதர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்களவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர்.

இலங்கைக்கு போட்டிகரமான பிராந்தியத்தின் இதர சுற்றுலா நாடுகளாக திகழும் தாய்லாந்து, வியட்னாம், மாலைதீவுகள் போன்றவற்றில் சுற்றுலாப் பயணிகளுக்கான வீசா நடைமுறைகள் மிகவும் எளிமையானதாக அமைந்திருக்கின்றமை அந்நாடுகளுக்கு இலங்கை அதிகளவு சுற்றுலாப் பயணிகளை இழப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்நிலையில் நாட்டில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட வீசா பெறும் நடைமுறையை தடை செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அதற்கான விசாரணைகள் பூர்த்தியடைந்து, இறுதித் தீர்வு கிடைத்ததன் பின்னர், புதிய வீசா நடைமுறைக் கொள்கையை அறிமுகம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தலாம். குறிப்பாக நாடு தேர்தல்களை எதிர்நோக்கவுள்ள நிலையிலும், நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுப்பதிலும், உள்நாட்டில் பலரின் ஜீவனோபாயமாகவும் திகழும் இந்தத் துறையை மேம்படுத்துவதற்காக கட்டணமில்லாத வீசா முறைமை அல்லது வீசா பெறாமல் வருகை தரக்கூடிய முறைமை போன்ற தீர்மானங்களை மேற்கொள்வது உகந்தது.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும், அதனூடாக 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெறுவதற்கும் இலங்கை சுற்றுலா திட்டமிட்டுள்ளது.

இதுவரையில் இவ்வாண்டில் இலங்கைக்கு சமூகமளித்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியா 225,641 பேருடன் முன்னிலையிலும், ரஷ்யா 118,682 பேருடன் இரண்டாமிடத்திலும், ஐக்கிய இராஜ்ஜியம் 110,189 பேருடன் மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றன.

# PCAF உடன் கொமர்ஷல் வங்கி இணைவு

இலங்கையின் கொமர்ஷல் வங்கி, தமது நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தை அளவிடுவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் உதவும் உலகளாவிய முயற்சியான காபன் கணக்கியல் நிதியியலுக்கான பங்குடைமை அமைப்புடன் [Partnership for Carbon Accounting Financials - (PCAF)] கையெழுத்திட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக மாறியுள்ளது.

ஏற்கனவே அதன் செயல்பாடுகளின் அடிப்படையில் 100% காபன் நடுநிலை சான்றளிக்கப்பட்டுள்ளது, PCAF உடனான கொமர்ஷல் வங்கியின் சிறந்த ஈடுபாடானது சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனத்தால் (IFC) ஆதரிக்கப்படுவதுடன் மற்றும் இது வங்கியின் காலநிலை மாற்றத் திட்டத்தின் முக்கிய அங்கமாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

PCAF ஆனது நிதியியல் துறைகளின் காபன் தடயத்தை அளவிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பொதுவான வழிமுறையை வழங்குகிறது. இந்த முறையானது உலகளாவிய GHG கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தரநிலையால் குறிப்பிடப்பட்டுள்ள நிதிசார்ந்த உமிழ்வுகள், எளிதாக்கப்பட்ட உமிழ்வுகள் மற்றும் காப்புறுதி தொடர்புடைய உமிழ்வுகள் ஆகியவை சார்பாக பல்வேறு நிதி நிறுவனங்களில் நிலையான அறிக்கையிடலை செயல்படுத்துகிறது.

‘கொமர்ஷல் வங்கியில், உலகளாவிய சிறந்த நடைமுறைகள் எங்கள் செயல்களுக்கு ஊக்கமளிக்கின்றன, குறிப்பாக எங்கள் நிலைபேண்தகைமையுடன் இணைக்கப்பட்ட முயற்சிகளுக்கு உந்துதலாக உள்ளன’ என்று வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க தெரிவித்தார். ‘சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை அம்சங்களில் முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிக்க, எங்கள் கடனளிப்பின் தாக்கங்களை மதிப்பிடுவதன் மூலம், சுற்றுச்சூழல் நட்பு செயல்பாடுகளின் எல்லைகளை விஸ்தரிப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். கார்பன் கணக்கியல் நிதியியலுக்கான பங்குடைமையுடன் எங்கள் ஒத்துழைப்பு இந்த பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் எட்டுகிறது. இந்த முயற்சியில் வழங்கி வரும் விலைமதிப்பற்ற வழிகாட்டுதல் மற்றும் ஆதரவிற்காக IFC நிறுவனத்துக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.’ என்றார்.

# Uber க்கு விசேட இணைப்புத் தீர்வுகள்



SLT-MOBITEL, போக்குவரத்து, உணவு விநியோக சேவைகள் app ஆன Uber உடன் இணைந்து, பெறுமதி சேர்க்கப்பட்ட இணைப்புத்திறன் தீர்வுகளை, இலங்கையில் Uber கட்டமைப்பில் பதிவு செய்துள்ள விற்பனையாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் சாரதிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

பங்காண்மையின் அங்கமாக, விற்பனையாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் சாரதிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க தீர்வுகள் ‘Uber Package’ எனும் நாமத்தில் அறிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில், இரு நிறுவனங்களினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் இணையப் பாவனை அதிகரித்துக் காணப்படும் சூழலில், உயர் டேட்டா நுகர்வுடன், app அடிப்படையிலான பொருளாதாரத்தில், இந்த பக்கேஜினால் டேட்டா, அழைப்புகள் மற்றும் SMS தேவைகள் போன்றன ஒப்பற்ற கட்டணத்தில் வழங்கப்படுகின்றன. பக்கேஜ்களின் உள்ளம்சங்களில் Uber, Google Maps மற்றும் WhatsApp ஆகியவற்றுக்கு 15 GB டேட்டா மற்றும் இதர இணையப் பாவனைக்கு மேலதிக 5GB எனிடைம் டேட்டா வழங்கப்படும். இவற்றுக்கு மேலதிகமாக, எந்த வலையமைப்புக்கும் 750 நிமிடங்களுக்கான அழைப்புகள் மற்றும் 750 SMSகள் ஆகியன ரூ 597க்கு வழங்கப்படும்.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL பல்வேறு டிஜிட்டல் இடையீடுகளினூடாக, தேசிய இணைப்புத்திறனை மேம்படுத்துவதில் எப்போதும் தன்னை அர்ப்பணித்துள்ளது. Uberஉடனான SLT-MOBITEL இன் பங்காண்மையின் மூலம், அறிவுத்திறன் நிறைந்த சமூகம் உருவாக்கப்படுகின்றது.

Uber பக்கேஜினால் செலுத்தும் பணத்துக்கு சிறந்த பெறுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், சௌகரியத்தினூடாக, விற்பனையாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் சாரதிகளுக்கு Uber கட்டமைப்பில் இணைந்திருப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.அதனூடாக, பெறுமதி சங்கிலியில் காணப்படும் அனைவரின் ஒட்டுமொத்த அனுபவமும் மேம்படுத்தப்படும். Uber பக்கேஜை செயற்படுத்துவதற்கு வாடிக்கையாளர்கள் #170# என்பதை டயல் செய்யலாம், பக்கேஜின் பெறுமதியை ரீலோட் செய்யலாம் அல்லது SLT-MOBITEL Self-care app ஐ பயன்படுத்தலாம்.

பெய்ரூட்

# மீண்டும் ஹிஸ்புல்லா



ஹமாஸ் அமைப்புக்கு எதிராக பலஸ்தீனத்தின் முக்கிய நகரமான காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கமைய, ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரானில் படுகொலை செய்யப்பட்டார். இவரது படுகொலைக்கு இஸ்ரேல் தான் காரணம் என்று ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டி வருகிறது.

எனவே, இஸ்மாயில் ஹனியே கொலைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் தரப்பில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால், இஸ்ரேல் ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் போர் பதற்றம் காரணமாக, லெபனானில் இருக்கும் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களை, உடனடியாக வெளியேறுமாறு அந்தந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

இஸ்ரேலின் பெய்ட் ஹிலால் நகரத்தை குறி வைத்து ஹிஸ்புல்லா அமைப்பு ரொக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தங்கியிருக்கும் குடியிருப்புகள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதனால், மத்தியக் கிழக்கில் போர் பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மொகதிஷ்

# தாக்குதலில் 32 பேர் பலி



சோமாலியா தலைநகர் மொகதிஸில் உள்ள பிரபலமான லிடோ கடற்கரையில் சனிக்கிழமை (02) இரவு பொது மக்கள் அதிகளவில் திரண்டிருந்த இடத்தில், அல் - ஷபாப் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி, தன் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து தற்கொலைப் படைதாக்குதல் நடத்தினார்.

மேலும், ஆயுதமேந்திய பயங்கரவாதிகள் சிலரும் பொதுமக்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இந்த கொடூரமான தாக்குதலில், 32 பேர் உயிரிழந்த நிலையில், 60க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பதிலுக்கு, பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில், ஆறு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சோமாலியாவில் தற்போதுள்ள அரசு, மிகவும் பலவீனமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் நிர்வாகத்தை நடத்தி வருகிறது.

டாக்கா

## மீண்டும் பங்களாதேசில்

# வெடித்தது வன்முறை



பங்களாதேஸில் தியாகிகளின் வாரிசுகளுக்கு அரசு பணிகளில் ஒதுக்கீடு தொடர்பான விவகாரத்தில் மீண்டும் போராட்டம் வெடித்துள்ளது.

பங்களாதேஷ் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு அரசு பணிகளில் 30 வீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை மீண்டும் கொண்டு வர ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு முடிவு செய்தது.

இதை எதிர்த்து கடந்த மாதம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வருமாறு மாணவர் அமைப்புகளுக்கு ஷேக் ஹசீனா கடந்த 2ஆம் திகதி அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் இந்த விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடத்த மறுப்பு தெரிவித்து மாணவர் அமைப்பினர் மீண்டும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

தலைநகர் டாக்காவில் கூடிய 2,000க்கும் மேற்பட்ட மாணவர்கள், “ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும்” என கோஷங்களை எழுப்பினர். அப்போது அங்கிருந்த பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கியதால் இருதரப்புக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது. இதில் 2 பேர் உயிரிழந்ததால் மீண்டும் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

அமராவதி

## விரைவு ரயிலில் தீ பற்றியதால்

# பயணிகள் அலறல்



விசாகப்பட்டினத்தில் விரைவு ரயிலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டடுள்ளது.

ஆந்திரா மாநிலம், விசாகப்பட்டினம் ரயில் நிலையத்தில், கோர்பா செல்ல இருந்த விரைவு ரயில் நின்று கொண்டிருந்தது.

அப்போது, திடீரென 3 பெட்டிகளில் தீ பற்றிய நிலையில், அங்கு விரைந்த தீயணைப்புத்துறையினர் கடும் போராட்டத்திற்கு பிறகு தீயை அணைத்தனர்.

இந்நிலையில், பயணிகள் அலாரத்தை இழுத்து எச்சரிக்கை செய்த அதேநேரம், அங்கு வந்த ரயில்வே அதிகாரிகள், அனைத்து பயணிகளையும் பத்திரமாக மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த செய்தி எழுதும் வரை உயிரிழப்பு ஏதும் இல்லை என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

போபால்

# சுவர் இடிந்து 9 சிறுவர்கள் பலி



மத்திய பிரதேச மாநிலத்தில் கோயில் சுவர் இடிந்து விழுந்ததில் 9 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

ஷாபூரின் ஹர்தவுல் பாபா கோயிலில் நடந்த வழிபாட்டு நிகழ்ச்சியின் போது திடீரென சுவர் இடிந்து விழுந்தது. இதில் 9 சிறுவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், சிலர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், பொலிஸார் உள்ளூர் மக்களுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.



## பரிஸ் 2024: 100 மீற்றர் அரையிறுதிப் போட்டியிலிருந்து

# பிறேஸர்-பிறைஸ் விலகினார்

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் தனது 100 மீற்றர் அரையிறுதிப் போட்டியிலிருந்து ஷெலி-அன் பிறேஸர்-பிறைஸ் சனிக்கிழமை (03) விலகியிருந்தார். இவர் இரண்டு தடவைகள் சம்பியனாகியிருந்தார்

அறிவிக்கப்படாத விதி மாற்றங்களால் அரங்கத்துக்குள் உள்நுழைய மறுக்கப்பட்டு பின்னர் தாமதமாக அனுமதிக்கப்பட்டு தயாராகும்போது காயமடைந்த நிலையிலேயே ஜமைக்காவின் பிறேஸர் பிறைஸ் விலகியிருந்தார்.

இந்நிலையில் இறுதியில் சென். லூசியாவின் ஜூலியன் அல்ஃபேர்ட் தங்கப் பதக்கத்தை வென்றதுடன், ஐக்கிய அமெரிக்காவின் ஷா கரி றிச்சர்ட்சன், மெலிஸா ஜெஃபெர்சன் ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும், வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

இதேவேளை இலங்கையின் தருஷி கருணாரத்னவும் வெளியேற்றப்பட்டுள்ளார். தகுதிகாண் சுற்றுப் போட்டியில் 800 மீற்றரை இரண்டு நிமிடங்கள் ஏழு செக்கன்கள் 76 மில்லி செக்கன்களில் கடந்து அரையிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெறத் தவறிய கருணாரத்ன, இரண்டாவது சுற்று தகுதிகாண் போட்டியில் இரண்டு நிமிடங்கள் ஆறு செக்கன்கள் 66 மில்லி செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறுவதற்கான நேரப் பெறுதியை மீண்டும் பெற்றிருக்காத நிலையிலேயே ஒலிம்பிக்கிலிருந்து விலகினார்.

இந்நிலையில் பதக்கப் பட்டியலில் 16 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 14 தங்கம், 24 வெள்ளி, 23 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் ஐக்கிய அமெரிக்காவும், 12 தங்கம், 14 வெள்ளி, 15 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் பிரான்ஸும், 12 தங்கம், 8 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களுடன் 27 வெண்கலப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் அவுஸ்திரேலியாவும் காணப்படுகின்றது. 10 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் பெரிய பிரித்தானியா காணப்படுகின்றது.

## டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# சென். ஜோசப்பை வென்றது வெஸ்லி

Dialog SCHOOLS RUGBY
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog எதிர்காலம் இன்றே.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரின் முதலாவது சுற்றில், ஹவ்லொக் பார்க்கில் சனிக்கிழமை (03) நடைபெற்ற சென். ஜோசப் கல்லூரியுடனான போட்டியில் 34-12 என்ற புள்ளிகள் கணக்கில் வென்ற வெஸ்லிக் கல்லூரி, 2ஏ குழுவில் மூன்றாமிடத்தைப் பெற்றது.

இதேவேளை பல்லேகலவில் நடைபெற்ற தர்மராஜக் கல்லூரியுடனான போட்டியில் 40-14 என்ற புள்ளிகள் கணக்கில் திருத்துவக் கல்லூரி வென்றது.

இந்நிலையில் சுகததாஸவில் நடைபெற்ற தேர்ஸ்டன் கல்லூரியுடனான போட்டியில் 97-16 என்ற புள்ளிகள் கணக்கில் றோயல் கல்லூரி வென்றது.

இதேவேளை, போகம்பரவில் நடைபெற்ற கிங்ஸ்வூட் கல்லூரியுடனான போட்டியில் 38-0 என்ற புள்ளிகள் கணக்கில் சாஹிராக் கல்லூரி வென்றது.



# தங்கத்தை வென்றார்

2024 ஆம் ஆண்டிற்கான MR.SRI LANKA போட்டியில் மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின், நானுஓயா பிரதேசத்தை சேர்ந்த உதயகுமார் ஷங்கர் கணேஷ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இந்த போட்டி கொழும்பு தெஹிவளையில், ஜூலை 28ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில், எல்லா மாவட்டங்களில் இருந்தும் 60 பேர் பங்குபற்றிய நிலையில் MEN PHYSIQUE மற்றும் 80 kg எடை பிரிவிற்கான BODYBUILDING ஆகிய பிரிவுகளில் உதயகுமார் சங்கர் கணேஷ் முறையே தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் வென்றுள்ளார்.

தற்போது இவர் நுவரெலியா நகரத்தில் THE IRON KINGDOM உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சிவிப்பாளர் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பரிஸ் 2024: பைல்ஸுக்கு மூன்றாவது தங்கம்

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கில் மூன்றாவது தங்கப் பதக்கத்தை ஐக்கிய அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் வென்றுள்ளார்.

இதுவரையில் மூன்று வகையான போட்டிகளான அணி நிகழ்வு, அனைத்தும் சேர்ந்த நிகழ்வு, வோல்டில் பங்குபற்றி மூன்றிலும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ள 27 வயதான பைல்ஸ், ஒலிம்பிக்கில் 7 தங்கப் பதக்கங்கள் உள்ளடங்கலாக 10 பதக்கங்களை மொத்தமாகப் பெற்றுள்ளார்.

## அம்பாறை பதியத்தலாவ தேசிய பாடசாலையை

# கல்முனை சாஹிரா வென்றது



அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு மூன்று 17 வயதுக்குட்பட்ட கடினபந்து கிரிக்கெட் தொடரின் முதலாவது சுற்றுப் போட்டியின் தமது முதலாவது சுற்றில் அம்பாறை பதியத்தலாவ தேசிய பாடசாலையை கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய பதியத்தலாவ தேசிய பாடசாலை, 38.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 151 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சாஹிரா 17.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 05, 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.